அரசாங்க நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

# இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம்
# (SLIDA)

## முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பமல்லாத) வெற்றிடங்களை நிரப்புதல்

*(04 வெற்றிடங்களுக்கு நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்)*

**இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம் என்பது (SLIDA) கற்கை மற்றும் அபிவிருத்தி, முகாமைத்துவ ஆலோசனை சேவைகள் மற்றும் ஆராய்ச்சி ஊடாக இலங்கை அரச சேவையின் ஆற்றலை கட்டியெழுப்புவது தொடர்பில் பொறுப்பு கூறுகின்ற முதன்மையான அரச நிறுவனமாகும்.**

நிறுவனத்தில் காணப்படும் நான்கு 04 முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக, பின்வரும் தகுதிகள் கொண்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| **பதவிகளுக்கு தேவையான தகுதிகள்** |
| --- |
| **கல்வி தகைமைகள்**<br>(அ) கல்வி பொது தராதர (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/தமிழ், கணிதம், மற்றும் ஆங்கில மொழி ஆகிய பாடங்களும் அடங்கலாக நான்கு (04) பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>(ஆ) கல்வி பொது தராதர (உயர்தர) பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று (3) பாடங்களில் சாதாரண பொது பரீட்சை தவிர்ந்து சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| **எழுத்திலான போட்டிப் பரீட்சை - பாடவிதானம்**<br>I. **மொழி தேர்ச்சி-** இதன்போது விண்ணப்பதாரர் சேவைக்கு சேர்வதற்கு எதிர்பார்க்கும் மொழி மூலம் மற்றும் ஆங்கில மொழி தொடர்பான தேர்ச்சி பரிசோதனை செய்யப்படும். இவ் வினாத்தாள் வெளிப்படுத்துகை, விளக்கம்/புரிதல், எழுத்துப்பிழை மற்றும் பொது இலக்கண விதிகளைப் பயன்படுத்துதல் தொடர்பான ஆற்றலை பரிசோதிக்கும் வகையில் அமையும்.<br>II. **உளச்சார்ப்பு பரீட்சை மற்றும் பொது அறிவு (Aptitude Test and General Knowledge)** பதவிக்குரிய பணிகளைச் சிறப்பாகச் செய்வதற்கான விண்ணப்பதாரரின் திறன் (Aptitude) மற்றும் கூர்மதி (Competency) மற்றும் தற்போதைய நிலைமைகள் குறித்த அவரது அறிவு ஆகியவற்றைச் பரிசோதிக்கும் வினாத்தாளாகும்.<br>III. **கணினித் தேர்வு (Computer Test)**<br>தகவல் தொழில்நுட்பம் (IT) தொடர்பான அடிப்படை கருத்துருக்கள் (Basic Concepts). கணினிப் பயன்பாடு தொடர்பான பல்வேறு செய்முறைகள் (Various Applications).கோப்பு முகாமைத்துவம் (File Management) பற்றிய அறிவு மற்றும் திறன் ஆகியவற்றைச் பரிசோதிக்கும் வினாத்தாளாகும். |

| |
|---|
| **கட்டமைவு முறையிலான நேர்முகப் பரீட்சை**<br>• ஆட்சேர்ப்புத் தேர்வில் சித்தியடைவதற்காக, விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு பாடத்திற்கும் குறைந்தபட்சம் 40% புள்ளிகளையும், அத்துடன் மூன்று பாடங்களுக்கும் சேர்த்து மொத்தமாக குறைந்தபட்சம் 50% புள்ளிகளையும் பெற்றிருக்க வேண்டும். கட்டமைக்கப்பட்ட நேர்காணலுக்கு (Structured Interview) அழைத்தலானது, வெளியக விண்ணப்பதாரர்கள் தேர்வில் பெற்ற புள்ளிகளின் வரிசையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். |
| **தெரிவு செய்யும் முறைமை –** எழுத்திலான போட்டி பரீட்சை மற்றும் கட்டமைவு முறையிலான நேர்முகப் பரீட்சை மூலம் |
| **சம்பள அளவுத் திட்டம்** : MA 1-1 – 2025 ரூபா.46,220-540×10-630×7-890×4-1190×20-83,390/- |
| **வயது** : 18 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாத வகையில் இருத்தல் வேண்டும். |

பரீட்சைக் கட்டணம் ரூபா. 600/- (அறுநூறு ரூபா) ஆகும். விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளும் இறுதித் தினத்திற்கு (2025.12.26) முன்னர், அந்தக் கட்டணத்தை பணிப்பாளர் நாயகம், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் பெயரில் உள்ள இலங்கை வங்கி (Bank of Ceylon), சுதந்திர சதுக்கக் கிளையின் (Independence Square Branch) 92563132 கணக்கு இலக்கத்திற்கு செலுத்தப்பட்டு, விண்ணப்பத்தாரரின் பெயரில் பெற்றுக்கொள்கின்ற பற்றுச்சீட்டின் விபரங்கள் நிகழ்நிலை விண்ணப்பம் பூர்த்தி செய்கையில் அதற்குள் உள்ளடக்குதல் வேண்டும். பணம் செலுத்தும் பற்றுச்சீட்டில் பணம் செலுத்திய காரணம் NIC No: - **MA2025** (உதா: 96XXXXXXV – MA2025) என்று கட்டாயமாக குறிப்பிடல் வேண்டும். செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் எந்தவொரு காரணம் கொண்டும் மீள செலுத்தப்பட மாட்டாது. உரிய திகதிக்கு பின்னர் கொடுப்பனவுகளை மேற்கொண்டு சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பொது விடயங்கள்** :

- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் இணையதளத்தை (**www.slida.lk)** அணுகி அதன் கீழ் Announcement உள்ள குகுல் படிவத்தை நிரப்பி நிகழ்நிலை முறை ஊடாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். (**https://www.slida.lk/announcement** )
- மேற்படி அனைத்து ஆட்சேர்ப்புகள் தொடர்பிலான இறுதி தீர்மானம் ஆளுகைச் சபை சார்ந்ததாகும்.

---

**Director General**
**Sri Lanka Institute of Development Administration**
**28/10 Malalasekara Mawatha**
**Colombo 07**
**Tele : 94 11 5980200 Fax : 94 11 2584406**
**E-mail : slida.lk**